## சுருக்கம்

தொழில் – சர்க்கரைத் துறை – 6 கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் மற்றும் 2 கூட்டுறவு சர்க்கரை ஆலை வடிப்பகங்களை தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரிய காற்று கவனிப்பு அலகுடன் இணைத்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

### தொழில் (எம்.ஐ.சி.1) துறை

அரசாணை (நிலை) எண். 99 நாள் : 31.07.2014

ஜய, ஆடி – 15,
திருவள்ளுவர் ஆண்டு 2045
படிக்கப்பட்டது :

அரசாணை(நிலை)எண்.96, தொழில்(எம்ஐசி1)துறை, நாள் 31.07.2014.

**ஆணை :**

24.07.2014 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட தொழில் வளர்ச்சித் திட்ட அறிவிப்பினை வெளியிட்டார்கள் :

"தண்ணீர் மற்றும் காற்றின் தரத்தினை மேம்படுத்தவும், மாசுக் கட்டுப்பாட்டு விதிகளை கடைபிடிக்கும் நோக்கத்துடனும், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரிய காற்று கவனிப்பு அலகுடன், நடிப்பிசைப் புலவர் கே.ஆர்.ராமசாமி கூட்டுறவு சர்க்கரை ஆலை, திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை, அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை, ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை, மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை, திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை, அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை வடிப்பகம் மற்றும் சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை வடிப்பகம் ஆகியவை இணைக்கப்படும். தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்துடன் ஏற்படுத்தப்படும் நேரடி தொடர்பு அமைப்பு, மின்னணு காட்சி முறையில் கண்காணிக்கும் வண்ணம் அமைக்கப்படும். இதன் மூலம் காற்று மற்றும் நீரிலுள்ள மாசு விவரங்கள் துல்லியமாக அறியப்படும். மாசுக் கட்டுப்பாட்டு விதிகளை முழுமையாக பின்பற்றவும், ஆலையைச் சுற்றியுள்ள பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் ஆலையிலிருந்து வெளியேற்றப்படும் நீர் மற்றும் காற்று மாசு விவரங்களை உடனுக்குடன் தெரிந்து கொள்ளவும் இத்திட்டம் உதவும். இத்திட்டத்திற்கு ஆகும் மொத்த செலவு 5 கோடியே 51 லட்சம் ரூபாய் ஆகும்".

2) மேற்காணும் திட்டத்தினை நடிப்பிசைப் புலவர் கே.ஆர்.ராமசாமி கூட்டுறவு சர்க்கரை ஆலை மற்றும் திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் ரூபாய் 156.66 லட்சம் செலவில் அரசின் பகுதி–II திட்டத்தின் மூலமாகவும், அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை, ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை, மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை மற்றும் திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் ரூபாய் 290.46 லட்சம் செலவில் கரும்பு மேல்வரி நிதியிலிருந்தும் (இது குறித்த ஆணை பார்வையில் கண்ட அரசு ஆணையில் வெளியிடப்பட்டுள்ளது), அமராவதி மற்றும் சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் உள்ள வடிப்பகங்களை ரூபாய் 104.06 லட்சம் செலவில் இந்த ஆலைகளின் சொந்த நிதியிலிருந்தும், கூட்டுறவு வங்கிகளிடமிருந்து கடனாகவும் பெற்று, குறிப்பிட்ட கால அளவிற்குள்

நடைமுறைப்படுத்தவும் மற்றும் இத்திட்டத்தினை செயல்படுத்துவதில் ஏற்படும் முன்னேற்றம் குறித்து மாதந்தோறும் அரசுக்கு அறிக்கை அனுப்புமாறும் சர்க்கரைத் துறை இயக்குநரை அரசு பணிக்கிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

ச.வி. சங்கர்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
சர்க்கரைத் துறை இயக்குநர்,
690, அண்ணா சாலை, நந்தனம், சென்னை – 600 035.

நகல்
சிறப்புத் திட்டங்கள் அமலாக்கத் துறை, சென்னை–9.
தொழில் (அநமு2.1/வசெ்தி1) துறை, சென்னை – 9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

ம. கலைச்செல்வி
பிரிவு அலுவலர் 31/7/2014

31/7/2014